சுவடிகள் பாதுகாப்பு மையம் அரியநூல்
தமிழ்த் தாய் 67 - வெளியீடு

ஓ.சி. சோணாசல முதலியாரவர்கள் இயற்றிய

திருநாளைப்போவாரென்னும்

# நந்தனாரேலப் பாட்டு



உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
International Institute of Tamil Studies

வளரும் பேரானந்த சபையினில் நீடி
வாழடியார் யாவர்க்குந் துணையாகக் கூடி
அம்மைசிவ காமியுட னானந்த கூத்து
ஆடினார் காணவே குறைகளைத் தீர்த்து
ஏகாந்த மாகநற் கருணையும் விளைந்து
எழுமன்ப ரந்நாளில் நித்திரை தெளிந்து
தயவுகொண் டெஞ்சாமற் கனவினில் வந்து
சனனத்தை மாற்றிடக் கட்டளைய தந்து
ஆளுவோ மென்றரன் சொன்னதை நினைந்து
அற்புதச் சின்மயத் தோத்திரம் புனைந்து
அய்யமுற் றிருப்பதை யன்பாக பார்த்து
ஆண்டவன் நித்திரையிற் சாற்றியதை யோர்த்து
தில்லைமூ வாயிரம் பேர்களு மோடி
திரளாக சந்நிதி முன்பாகக் கூடி
திட்டத்தை மேற்கொண்டு செய்திட ஓங்கி
திருவாணை போகின்ற நாயனா ரேங்கி
இருந்த விடந்தன்னிலே சென்றந்த காலம்
இசைந்து மூவாயிரம் வேதியர்கள் சீலம்
பரவுமத் தொண்டனைக் கண்ணுற்று கூவி
படிக்கெங்க ளையனே வாவென்று மேவி
அழைத்திட யிவ்வேளை வந்திட்ட நீங்கள்
ஆரென் றிறைஞ்சவே பொற்புட னுங்கள்
தில்லையில் வாழ்கின்ற வந்தணர்க ளென்று
திறமாக செப்பியே கும்பலாய் நின்று
சிற்பர னேவலால் வந்தன மிங்கே
திகைப்பதை விட்டெங்கள் பின்னாக வங்கே
வந்திடுந் தொண்டரோ வென்றதை கேட்டு
மனதினில் மன்னிய குறைகளை மீட்டு
அன்னையைக் கண்டசேய்க் கொப்பாக சிந்தை
அலர்ந்துமே நந்தனா ரன்பாக விந்தை
சேர்ந்திடுந் தில்லைவா ழந்தணரை நோக்கி
திவ்யமாய் சிரமீது வங்கைகளை தூக்கி
தொழுதவர்கள் தம்மோடு பெருமையாய் செல்ல



"அறிவுச் செல்வங்கள் அனைத்தையும்
தமிழுக்குக் கொண்டுவர வேண்டும்.
இனிவரும் நூற்றாண்டுகளுக்கும்
அருந்தமிழை ஆற்றல் படுத்த வேண்டும்"

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
புரட்சித் தலைவி
**அம்மா** அவர்கள்

ஒ.சி. சோணாசல முதலியாரவர்கள்.
இயற்றிய

# திருநாளைப்போவாரென்னும்

# நந்தனாரேலப் பாட்டு

சுவடிகள் பாதுகாப்பு மய்யம் அரியநூல்
தமிழ்த் தாய் 67 - வெளியீடு

பதிப்பாசிரியர்

முனைவர் **கோ.விசயராகவன்**

எம்.ஏ.,எம்.ஃபில்.,எம்.பி.ஏ.,பி.எட்.,பிஎச்.டி
இயக்குநர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்**
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
இரண்டாம் முதன்மைச் சாலை, மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்
தரமணி, சென்னை - 600 113

# நூல் விவரக் குறிப்பு


| | |
|---|---|
| நூல் தலைப்பு | : நந்தனாரேலப் பாட்டு |
| நூல் ஆசிரியர் | : ஒ.சி. சோணாசல முதலியாரவர்கள் |
| வெளியீட்டாளரும் பதிப்புரிமையும் | : உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்<br>இரண்டாம் முதன்மைச் சாலை<br>மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்<br>தரமணி, சென்னை - 600 113. |
| தொலைபேசி எண் | : 044 - 22542992 |
| வெளியீட்டு எண் | : 838 |
| மொழி | : தமிழ் |
| பதிப்பு ஆண்டு | : 2015 : முதற்பதிப்பு : |
| பயன்படுத்திய தாள் | : 16 கிகி டி.என்.பி.எல்.வெள்ளை |
| நூலின் அளவு | : 1/8 டெம்மி |
| எழுத்தின் அளவு | : 11 புள்ளி |
| பக்க எண்ணிக்கை | : 48 |
| அச்சுப்படிகளின் எண்ணிக்கை | : 1200 |
| விலை | : ரூ.30 (ரூபாய் முப்பது மட்டும்) |
| ISBN | : 978-93-85165-49-8 |
| அச்சகம் | : ராஜ் எண்டர்பிரைஸஸ்<br>திருவல்லிக்கேணி<br>சென்னை - 600 005. |

முனைவர் **கோ.விசயராகவன்** எம்.ஏ., எம்.ஃபில்.,எம்.பி.ஏ.,பி.எட்., பிஎச்.டி.
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை 600 113

# அணிந்துரை

*பழங்கால அரியநூல்களையும் சுவடிகளையும் பாதுகாக்கும் வகையில் 2014ஆம் ஆண்டு நிறுவனத்தில் 34* ***இலட்சம் மதிப்பீட்டில் சுவடிகள் பாதுகாப்பு மையம் மாண்புமிகு மக்கள் முதல்வர் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் தொடங்கப்பட்டது.*** *அவ்வகையில் நாடெங்கினும் உள்ள அரிய நூல்களை, சுவடிகளைத் திரட்டும் பணி தொடங்கப்பட்டு, கண்டறியப்பட்டுள்ள நூல்களைத் தமிழ்த்தாய் 67 - பெருவிழா, பிப்ரவரி 2015இல் வெளியிடும் திட்டத்தின் கீழ், 1900ஆம் ஆண்டு வெளிவந்துள்ள இந்நூல் இப்பொழுது மீட்டுருவாக்கம் செய்யப்பெற்று வெளியிடப்படுகிறது.*

*தமிழகத்தில் தழைத்த சைவ சமயம் பெற்ற பெரும்பேறு பெரியபுராணம் என்னும் பெருங்காப்பியம், கடமையில் உறுதிகாத்து கங்கைவார் சடையனை அடைந்த நாயன்மார்களை உலகுக்கு அடையாளங்காட்டியது அக்காப்பியம். அந்நூல் கூறும் நாயன்மார்களுள் ஒருவர் திருநாளைப்போவார் என்னும் நந்தனார். அவரைப்பற்றிய நந்தனார் சரித்திரக் கீர்த்தனை போன்ற தனி நூல்களும் உள்ளன.*

*நந்தனாரைப்பற்றிய தனி நூல்களில் ஒன்றுதான் **நந்தனார் ஏலப்பாட்டு** என்னும் இந்நூல். நந்தனாருடைய பெருமைகளை ஏலப்பாட்டாக வடித்திருப்பவர் உத்திரமேரூர்*

பகுதியைச் சார்ந்த திரு.ஓ.சி.சோணாசல முதலியாரவார்கள். பாவளமும் நாளமும் கனிந்திருக்கும் கற்கண்டுசுவை தேக்கும் பாடல்கள் அடங்கியுள்ளதைப் படிப்போர் கண்ணுறுவர்.

தமிழறிஞர்களின் தமிழ்த் தொண்டினை எப்போதும் பாராட்டுவதில் முதன்மையானவர் **மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா** அவர்கள் ஆவார். மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழ் மீதும் தமிழர் மீதும் தமிழ்ப் பண்பாட்டின் மீதும் கொண்டுள்ள அன்பும் கருணையும் அளப்பரியன. தமிழின் மேம்பாட்டுக்கெனப் பல திட்டங்களை மேற்கொண்டு செயலாற்றி வருகின்றார்கள். ஒல்லும்வகையெல்லாம் தமிழ் வளர்த்துவரும் **மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா** அவர்களுக்கு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் சார்பில் நன்றிகளைப் பதிவு செய்கின்றோம்.

தமிழ் மொழி வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்துவரும் **பள்ளிக்கல்வி, தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சரும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத் தலைவருமாகிய மாண்புமிகு கே.சி. வீரமணி** அவர்களுக்கு நன்றி.

தமிழ் வளர்ச்சிப் பணிகளில் ஆர்வத்தோடு நாட்டம் செலுத்தித் தமிழ்த் தொண்டாற்றிவரும் **தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசுச் செயலாளர் முனைவர் மூ. இராசாராம்** இ.ஆ.ப. அவர்களுக்கும் இதயம் கனிந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூல் சிறப்பான முறையில் மறு அச்சுப் பெற முனைந்து உழைத்த உலகத் தமிழாராய்ச்சி நிறுவன அனைத்துப் பணியாளர்களுக்கும் அச்சகத்தார்க்கும் என் நன்றி.

**இயக்குநர்**

உ

கடவுள் துணை.

அறுபத்துமூன்று நாயன்மார்களி லொருவராகிய

திருநாளைப்போவாரென்னும்

# நந்தனாரேலப்பாட்டு.


---

இஃது.

உத்திரன் மேரூர் டிவிஷன் ஒழுகரை
ம-ா-ா-ஸ்ரீ,
வே-சின்னையா முதலியாரவர்கள் குமாரர்
ஒ. சி. சோணாசலமுதலியாரவர்கள்
இயற்றியதை

காஞ்சீபுரம் மிஷன் ஐஸ்கூலில்
தமிழ்த் தலைமைப்புலமை நடாத்தும்
ம-ா-ா-ஸ்ரீ,
பு-கனகசபை நாயகரவர்களால்
பார்வையிடப்பட்டு

சென்னை ஸ்ரீமட்வோர் குழலம்பா ளச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.
1900.





உ

கடவுள் துணை.

# சாத்துகவிகள்

அஷ்டாவதானம்

## பூவை-கலியாணசுந்தர முதலியாரவர்கள்

இயற்றிய - வெண்பா.

புண்ணியர்கள் போற்றிப் புகழ்நந்த னார்சரித
மெண்ணியவே லப்பா வெனவழங்கத்—தண்ணளியாற்
சொற்றா னெழுகரைவாழ் சோணாச லக்கவிஞன்
கற்றார் களிக்கக் கனிந்து.

காஞ்சீபுரம் பச்சையப்பமுதலியாரவர்கள்
கல்விச்சாலையில் தமிழ்த்தலைமைப்புலமை நடாத்தும்
வெண்பாப்புலி

## தி. சு. வேலுசாமிப்பிள்ளையவர்களியற்றிய

நேரிசை வெண்பா.

சீலப்பா மேற்றொளிருஞ் சீர்கொணந்த னார்கதையை
ஏலப்பா வில்லைத் தினிதமைத்தான்—ஞாலத்
துதிக்கு மொழுகரைவாழ் சோணா சலவேள்
கதிக்கும் படியுலகின் கண்.

காஞ்சீப்புரம் மிஷன் ஐ ஸ்கூலில்
தமிழ்த்தலைமைப்புலமை நடாத்தும்

## பு. கனகசபைநாயகரவர்களியற்றிய

நேரிசை வெண்பா.

நல்லோர் புகழ்நந்த னார்சரித வேலப்பா
வல்லோர் புகழவ குத்துரைத்தான்—சொல்லா
ரொழுகரைவாழ் சோணா சலனுமோ ரன்பன்
பழுதின் மொழியாற் பரிந்து

சென்னைச் சிந்தாதிரிப்பேட்டையிலிருக்கும்

## மாயூரம் - நமசிவாயம்பிள்ளையவர்க ளியற்றிய

பதினான்குசீர் விருத்தம்.

சீர்மருவு மாமறைச் சைவந்த ழைத்திடத்
திருவாத லூரில் வந்து
திருவருள் வசத்தராய்ப் பலபணிபு ரிந்துகுஞ்
சிதபாத நீழ லுற்ற
பேர்மருவு நந்தனார் புண்ணியச் சரிதையைப்
பெட்புடன் வானு ளோரும்
பேழ்பெறும் பூவுலகி லறிஞரும் போற்றியே
பேசுமிகு வினிய தமிழில்
நேர்மருவு மேலநற் பாவினி லறைந்தனன்
நேமிசார் தொண்டை நாட்டின்
நித்திலந் தங்குகம் பாநதி விளங்கிடும்
நிகரிலாக் காஞ்சி யின்பால்
கார்தவழு மேரொழு கரைப்பதியின் மேவிவாழ்
கங்கா குலத் துதித்த
கருணைமிகு தீரனுஞ் சோணுசலக் கவிஞன்
கண்டவ ருவக்க மாதோ.

அகரந்தூளி குளப்பாக்கம் ஆசுகவி.

## அரங்கசாமிநாயுடு அவர்களியற்றிய

யாழ்முறிப்பண்.

உன்னத செந்நெலுள வய லுற்பவமற்புதஞ்சூ
ழொழு கரை பதி மிசை யோங்குயர் கங்கைகுலச்
சின்னய மாமுதலி தவஞ் செழித்திடவே தோன்றுஞ்
சேயன் சோணு சலக் கவிச் சிங்கவி னோதகுணன்
நன்னய மாய்விளங்கும் நந்த னார்புகழ் திவ்யகதை
நறும் பசும் பாலுந் தேனின் னற்சுவை முக்கனிபோல்
பன்னய மின்பமுற வேலப் பாவினிற் சோதிசிவன்
பதம் பணி கதி காணப் பாடின னிசைபெறவே.

### கட்டளைக்கலித்துறை.

சந்தப் பொழிலா ரொழுகரை யம்பதி சார்ந்திலகும்
சுந்தர சோணு சலக்கவி ராஜன் சுகந்தமுறும்
நந்தன் சரிதஞ் சொலிதெழி லேல நவின்றிசைப்பா
சந்தந முக்கனி போலுய ரின்சொலிற் சாற்றினனே.

பல்லவபுரம் பிரசங்கவித்வான்

## சோணுசலமுதலியாரவர்களியற்றிய

### வெண்பா.

ஓங்கு புகழ்சே ரொழுகரையெ னும்பதிவாழ்
பாங்குபெறு சின்னையா பாற்கடலீன்—பூங்கதிர்கேர்
சோணு சலனுரைத்தான் றூய்நந்த னார்சரித
மாணுரே லப்பாட்டில் வைத்து.

கோவளம் சங்கீதசாகித்ய வித்வான்

## குட்டிசாமிநாயகரவர்களியற்றிய

### கழிநெடிலடிலாசிரியவிருத்தம்.

செப்பரிய திரைகளாற் சங்கு சென் டாடிவரு
சேயா றெனப்படுநதித்
தென்பா லுமாபதிக் குயர்பூசை செய்தருட்
டிகழு மறை யவர் வீதியும்
ஒப்பரிய கங்கைகுல வேளாளர் வீதியும்
ஓங்குகரு ணீகரோடு
உசிதகன மேவுக்ஷத் திரியருறை வீதியு
முனைக்குமெல் லாச்செல்வமும்
எப்பொழுது நிலைபெற் றிருக்குமொழு கரைநகரி
லிலகுசெல் வக்கணேசன்
இன்னருட் டுணைகொண்டு நந்தனார் தம்புக
ழினிக்கு மேலப் பாவினிற்
செப்பினன் களப்பாள ரிஷிகோத்ர முலகினிற்
செழிக்கவரு சின்னையவேள்
சேயென வுதித்தறிஞர் யாவரு மதித்திடத்
திகழ்சோண சைலனனரோ.

வே று.

முருகுறு மிதழ்மதி யணிசடையான் மூளரியந் திருவடிக்கன்பு
பெருகுறு நந்தனார் புகழேலப் பாவினிற் பேசினன் மதுபோற்
பருகுறு யாரு மதியொழு கரையாம் பதியினி னதிமரபோங்க
வருகுண மிகுசின்னையவே டவத்தில் வயங்குசோணு சலன்மா
(தோ'

சாயணபுரத்திலிருக்கும் ஐயன்பேட்டை

## முனிசாமி உபாத்தியாயரவர்களியற்றிய

வெண்பா.

தேங்குநறுச் சோலை செறியு மொழுகரையி
லாங்குவே ளாள ருமரபுற்—றோங்கிமா
நந்தன் சரிதமதை நல்லேலப் பாவாக்கித்
தந்தநற் சோணு சலன்.

விருத்தம்.

அந்திமாமதியுஞ் செஞ்சடைப்புனலு மணிந்திடுமானருள் பெற்ற, நந்தனரேலப் பாவெனும் பான்மை நவின்றனர் நகைமலர்ப் பொழில்சூழ், சுந்தரமாமிக் கொழுகரைமேவுந் தய்யசின்னையவேடந்த, விந்தையாங் கங்கை நதிமரபோங்க விளங்கு சோணுசலமிக்கோன்.

உ

வேலுமயிலுந்துணை.

# நந்தனுரேலப்பாட்டு.

விநாயகர் துதி.

பின்முடுகு வெண்பா.

பூவளரும் நற்கதியிற் பொங்குநந்த னுர்புகழைத்
தாவளரே லப்பாட்டிற் சொல்லுதற்கு—மாவளருந்
தந்தவத னந்திகழுஞ் சந்தமின்னு மைந்துகரன்
கந்தவர விந்தபதங் காப்பு.

அவையடக்கம்.

சீராரு மாதனூர்ச் சேரியில்வந் தாங்கருள்சே
ரேசாரு நந்தனு ரேலப்பா—நேராக
உன்னிப்பார்த் தேயிதனி லுள்ள பிழைபொறுத்து
மன்னிப்பார் நல்லோர் மகிழ்ந்து.

ஏலேலோ-ஏலேலோ-மாதேவா
ஏலேலோ-ஏலேலோ.

சீர்தங்கும் ஆதனூரில்-வெகு
சிறப்புடனே வாழ்ந்தருளால்
நார்தங்கும் எங்கள்நந்த—னுர்க்கு
நல்லேலப் பாவுரைக்க
ஏர்தங்கும் உமையம்மை—அன்று
இன்பமுடன் றருமரிய
கார்தங்கும் மேனிதிகழ்—ஞானக்
கணபதியின் கழல்துணையே.

முடுகு.

கனகமா மேருதனை கையிற் பிடித்து
கருதரிய புரமூன்று நொடியிற் பொடித்து
கனிவுடன் நந்தனர் தன்னை யழைத்து
கடாக்ஷித்த தேவனுக் கன்பு தொடுத்து

நாரதன் சூள்கொண்டு நன்மருத மாக
நளகூபன் மணிவக்ரன் நலங்கெட்டு போக
அம்மருதஞ் சாய்த்தன்றோர் பழையவுரு வாக
அருள்செய்த நாரணனைப் போற்றிவை போக
சுந்தரக் கவுணியர் பசியொழிய வந்து
துணைமுலைப் பாலினை யன்போ டுவந்து
பொன்வள்ள மதனிலே பரிவாய்க் கறந்து
புகட்டிய வுமையம்மை பாதம் நினைந்து
அமரர்கோன் வைத்ததிரு நந்தவனஞ் சீரை
யடையவே யகத்தியன் கைக்கமண்டல நீரை
காகவுரு கொடுவந்து காலாலுதைத்து
கவிழ்த்தகண பதிதாளை கருத்தினில் வைத்து
ஓமுருகாவென் றோலமிட மங்கை
ஓடியே வெட்டுண் டிருந்தவ ளங்கை
வளரவே யளித்தவ்வை மகிழுமொரு தங்கை
வள்ளிநாயகனை பணிக் தகற்றுவோர் சங்கை
கொழுதியிசை யளிமுறலும் வெண்கமல மாது
குலவும் பாரதிதாளை கும்பிட்டுப் போது
பரிமளக் குங்குமக் கொங்கைபூ மாது
பாதம் பணிந்தமார்த் தாண்டன்முதற் கேது
என்னு நவக்கிரக மிணையடி பணிந்து
இந்திரன் முதலட்ட பாலகரைத் துணிந்து
அற்புத வார்த்தை நாளு மணிந்து
அயராமல் வந்தித்து மிகவுந் தணிந்து
வளர்கைலை யங்கிரியை கார்க்கக்கதித்து
வாழும்நந்தீசனை மனதிற் பதித்து
காளத்தி நாதன்பால் ஞானமுதித்து
கதிபெற்ற கண்ணப்பர் பொன்னடி துதித்து
கற்பனை யலங்கார செய்யுளைப் பாடி
நன்னுதல் பொற்பாத நீழலிற் கூடி
திகழப்ப மூர்த்தியின் திருவடியை நாடி
தியானித்து வந்நாளி லாரூரில் காடி
சிற்பரன் சொற்படி நியமங்கள் கற்ற

திருத்தொண்டத் தொகையினைச் சொல்லியருள் பெற்ற
சுந்தர மூர்த்தியை வணங்கிமா சற்ற
தோணிமா புரத்தினில் வ்கதெழி லுற்ற
தனையிட்ட வமணனை வாதால் வருத்தி
சைவசம யங்களை நிலையாய் நிறுத்தி
செயம்பெற்ற கவுணியனை நெஞ்சி லிருத்தி
நீராத பூவிலைம் புலனைத் திருத்தி
சொல்லரிய நீதியாம் பதினா றறிந்து
சோதியடி வாழ்வாத வூரரைப் பரிந்து
பரவியொண் மணலாலே லிங்கம் புரிந்து
பற்றாக பூசித் தருளால் விரிந்து
ஒங்குசண் டேசுர நாயனுர் தாளை
உன்னியே தில்லையந் தணரையிவ் வேளை
அடிதொழு தாக்கத்திற் பூதியின் றாளை
அணிதிருத் தொண்டரா யேற்றி திருநாளை
போகுவே னென்றவுட னுவல் மிகுந்து
புலியூரிற் சென்றரன் பாலிற் புகுந்து
தங்கிய வன்டரின் கீர்த்தியை மகிழ்ந்து
சந்தயேலப் பாவிற் சொல்லுவே னுகந்து. ஏலே (1)

சோதிமதி தவழ்நறும்பூஞ்-சோலை
சூழுபய மண்டலத்தில்
திதில்புண் யங்களெல்லாத்-திரண்டு
திருவுருவாய்த் தானெளிரும்
வேதியர்கள் புகழ்நந்த-னுரால்
வியனுத னூர்தனக்கு
ஆதிசிவன் மாலயனு-ரிவை
ஆகாதென் றகூரத்திடுவேன்.

முடுகு.

அறைவதற் கொண்ணுத வற்புதஞ் சேர்ந்து
ஆலித் தெழுமிந்த்ர புரிதனில் நேர்ந்து
அமரருக் கதிபதி யாகவே நல்ல
நீக்தமுறு மிந்திர னுணையால் வல்ல

சத்தமேகங்களிற் சந்தோடங்கொண்டு
தங்காமலாவர்த்தங் கடலையேயுண்டு
ஆரவாரத்துட னகிலத்திலுள்ள
ஆன்மாக்களெல்லோரு மானந்தங்கொள்ள
சோனைவிழக் கண்டுடன் காளைகளைக்கூட்டி
சுந்தரப்பொன்னேரை சுகமாகப் பூட்டி
மள்ளர்களிசைபாடி பண்ணையையுழுது
மங்காமற்புனல்விற்க சேறுக்கிப்பழுது
வாராமல்நெற்களின் விதைகளைத்தூவி
வளர்ந்திடவோம்பியதை வகையாகமேவி
பருவத்திலறுத்தவொண் களங்களிற்சேர்த்து
பக்குவப்படுத்தியதின் சடங்குகளைத்தீர்த்து
நீண்மலைக்கொப்பாக நெற்போர்குவித்து
நிருபரிறைதந்தா டவர்கலியையவித்து
ஒளிருமவ்வூரெங்கு மாமரக்கூட்டம்
உரைமல்லிமுதலான வொண்செடித்தோட்டம்
திகழவேசிற்பிகள் செய்துமுடித்த
சிகரங்களோடரண் சூழத்தடித்த
செம்பொனாலமரர்கள் சேர்ந்துமேவாழும்
சிராலயங்கோடி செறிந்தொளிர்சூழும்
வேதபாராயணஞ் செய்கின்றவல்ல
வேள்விகட்குரியவொண் மண்டபமுநல்ல
மாதவர்கள்வாழ்கின்ற மடங்களொருகோடி
மணிகொளுஞ்சிங்காரப் பொருள்களைத்தேடி
விற்குங்கடைத்தெரு வெங்கெங்குந்தோன்ற
விளங்கறச்சாலைகள் வேணதுண்டான்ற
நான்குவேதங்களில் நவின்றபொருளாய்ந்து
நாளுமறவாமல். நலங்களிற்றோய்ந்து
வாழ்ந்திடுமந்தணர்கள் வசிக்கின்றசித்ர
மாளிகைக்கூடிய வீதிகளும்பத்ர
மேந்தியரசாள்கின்ற வேந்தர்கள்மேவும்
வீடுகள்செறிந்தொளிர் வீதிபலதாவும்
வைசியர்பொருந்திய வளமானவீதி

வயங்குநாலெட்டறஞ் செய்திடுஞ்சோதி
தங்குபூவைசியர் வீதிகளுமற்ற
சகலரும்வாழுநற் சதுக்கங்களுற்ற
நளினமலசாம்பல்வகை சேர்க்கிடும்வாவி
நலமுறுஞ்செல்வங்க ளெல்லாமுமேவி
சிறப்பெய்யுமாதனூர்ச் சேரியிலுதித்து
சீர்நந்தனுரெனச் செப்பக்கதித்து
மறவாமற்கங்கையணி நாதனிருதாளை
வத்தித்துமற்றெதையு மோர்கிமிடவேளை
ஆகிலும்நினையாம லவ்வூரிலுள்ள
அந்தணர்கள்கொண்டாடி யன்போடுகொள்ள
அடிபணிந்தன்னவர்க் காளாகிவேண
அலுவலேபார்த்தொளி ரன்பருங்காண
நாளுக்குநாளாக நலங்கொளவளர்த்து
நற்குணம்யாவுமே நண்ணிடக்கிளர்ந்து
வெட்டிமைக்காகவே விடபட்டமான்ய
வெகுநிலந்தன்னிலே வியனுறுந்தான்ய
வகைகளையுற்பவஞ் செய்துமேநல்ல
வளமாகஜீவித்து வாழ்ந்துமேவல்ல
பதவியையன்பர்க்கு பாலிக்கநாளும்
பரவுமரனாலயந் தோறுமேநீளும்
பேரிகைவீணையாழ் மத்தளமோசை
பிரிவிலாவாச்சிய வகைகளுக்காசை
யுற்றுவக்கருவிகட் குரித்தானசுத்த
முயர்தோண்ணரம்போடு பூசைக்கடுத்த
கோரோசனத்தையுங் குறையாமற்சோதி
கொன்றையுறுஞ்செஞ்சடை நாதனுமாதி
கடவுளுக்கேமிகக் காதலித்தீந்து
கர்த்தனேயென்றவர்க் காலினிற்றாழ்ந்து
குலத்தொழில்யாவையுங் கூசாமற்றாக்கி
குணமுடனியற்றிதன் சன்மத்தைநோக்கி
விமலனுரொண்புகழை யுளத்திற்பதித்து
வேண்டியவர்பாதத்தை மேலாய்த்துதித்து. ஏலே (2)

குதிப்பதற்கு வொண்ணாத-யெங்கள்
அய்யநந்தனாருமுன்னி
மதிப்பதற்கு வொண்ணாத-வளம்
வாய்ந்ததிருப் புன்கூரில்
விதிப்பதற்கு வொண்ணாத-தொழிலை
விதிக்குஞ்சிவ லோகனருள்
கதிப்பதற்கு வொண்ணாத-நலங்
காணுதற்கன்பாகியன்றே.

(முடுகு.)

அன்பர்கள்கொண்டாட வறிவுமேலிட்டு
ஐம்புலச்சேட்டையி னவத்தையைவிட்டு
அரகராவென்றுமே யத்தனைப்பாடி
அரிகிலுள புலையர்பா லாலித்துகூடி
சொல்லுவாரன்னவரை சுகமாகப்பார்த்து
தொடர்பவத்தொகுதியைத் துணையெனச்சேர்த்து
வருவதாற்பயனொன்றும் வாய்க்காதுகெட்ட
மாயையிலிடர்ப்பட்டு மாளாததுட்ட
நரகத்துக்காளாக வேண்டுமேயன்றி
நற்கதிகாட்டிடா தாதலால்நன்றி
திகழுந்திருப்புன் கூரினில்நீளும்
சிவலோகநாதனை யன்போடுநாளும்
சேவிக்கமாறாத செல்வங்கள்பெற்று
சிறந்துசிதம்வாழலா மென்றினியபற்று
கொண்டினியென்னோடு வாருங்கள்சுத்த
கொன்றையணிநாதனைக் காணவேமெத்த
துரிதமாய்ச்சென்றிடத் தடையென்னவென்று
சுகமுடன்நந்தனார் கேட்டவுடனன்று
நீதிநெறியுணராத நிர்மூடரான
நிலையிலாப்பாதகத் தொழில்செயுந்தீன
புலையர்கள்யாவரு மொன்றாகக்கூடி
போர்க்களத்துற்றமா கரிபோலநீடி
வீரிட்டெழுந்துகண் சிவந்திடப்பார்த்து

விதிகள்பல கற்றவன் போல்மொழிச் சேர்த்து
பேசியே யெங்களை யேமாற்ற வந்த
பேயனே நமக்கினிய துணையாகுஞ் சொந்த
வேலையைப் பார்த்துலகில் வாழாமற் சோதி
விமலனைக் காணபற சாதிக்கு நீதி
ஆகுமோ வென்றப் புலையர்கள் சொல்ல
அன்னவரை விட்டுவெளி வந்துருகி வல்ல
நந்தனு ரப்போது நஞ்சுண்ட கண்ட
நாதனே யுன்னிரு பாதத்தி லொண்ட
கூப்பிட்டும் வாராமற் குற்றத்து ளென்னை
கூட்டினு ராதலா லின்னருள் தன்னை
செய்தினி யாளுவாய் செல்வங்க ளுற்ற
சிவலோக நாதனே யென்றவரை சுற்ற
நினைந்தய ராமலே நிமலனுர்க் குரிய
நீள்திருத் தொண்டர்கள் காணுதற் கரிய
பூசைக் கினியநற் கோரோ சனத்தை
புகழோ டெடுத்தொண் வாத்திய வினத்தை
மூடுதற் காகவே பொற்றோல் நரம்பை
முயற்சியாற் கைக்கொண் டெங்கிலு மரம்பை
முதலான நந்தனுஞ் சூழ்ந்து நகை நீடி
முறைசேர் திருப்புன் கூரை மிகநாடி
சென்றுமே யந்நாளிற் சீருடன் சேர்ந்து
சிவலோக நாதனை தரிசிக்க நேர்ந்து
தொண்டாக கொடுபோன பொருளுடன் மிக்க
சோதியரன் வாழ்கின்ற சந்நிதிமுன் றக்க
வந்தனை யோடரனை வாழ்த்தித் துதித்து
மட்டிலா வின்பத்தை மனதிற் பதித்து
நேராக நின்றவர் வதனத்தை காண
நினைத்தபடி பார்வைக்கெட் டாமலேண
முறுநந்தி தேவனு ரோங்கியே நிற்க
உளங்கசிந் தன்பனு ரந்நாள் சுவர்க்க
நாதனே யின்றுன் னுசைமே லிட்டு

கஞ்சொத்த வஞ்சனை யாவையும் விட்டு
நாடினே னற்புதச் சேவடியின் காட்சி
நானறிய வொண்ணாத வண்ணமாய் நீட்சி
திகிரிபோ லுன்னை மறைக்கின்ற நந்தி
தேவரை விலக்கிபத மீந்தரு ளந்தி
மாமதியை யணியெங்க ளத்தனே யென்று
வாய்விட் டழுதுகண் ணீர்சொரிய நின்று
தொழுதிடக் கண்டுட னுடிடும் பாதன்
சூழ்நந்தி தேவரை சிவலோக நாதன். (எலே) (3)

நாதனெனுஞ் சிவபெருமா—னன்று
நன்னயமாய்த் தான்மகிழ்ந்து
போதனெனுந் திருநந்தி—தேவன்
பொற்றொளியைக் கண்டழைத்து
வேதனெனு மலரயனு—மற்ற
விண்ணவருங் காணரிய
நீதனெனும் நந்தனர்—தனக்கு
நேரிடை விலக்கு தற்கே.

(முடுகு.)

விலகாம லெனைக்கண்டு தரிசனஞ் செய்ய
வேண்டியவ ரிவ்விடம் வந்தனர் துய்ய
மெஞ்ஞான முற்றயித் தொண்டரின் குணத்தை
மேதினியிற் சொலயிவர்க் கிடிலை மணத்தை
தரு நமது சந்நிதிக் காவலாய் நீயும்
தட்சணம் விலகென் றுரைத்திடப் பாயும்
புலியைக் கண்டோடுமா பசுபோற் பயந்து
புகழ் நந்தி தேவரு மொதுங்கி நயந்து
நந்தனா ரப்பொழு தானந்தங் கொண்டு
நவின்றிடுஞ் சிவலோக நாதனைக் கண்டு
கோரோ சனந்துடன் றேடித் தொகுத்த
குலவுதோல் நரம்புகளை யீந்தே மிகுத்த
மாரியைக் கண்ட பயிர் போலே மகிழ்ந்து
யாறுமல் தரிசனஞ் செய்தே புகழ்ந்து

சொல்லரிய செஞ்சடைத் தலையினிற் சோதி
சூழ்கங்கை மதிகொன்றை யணிந்துவள ராதி
தேவனே சனகாதி முனிவர்க்கு நல்ல
திடமுடன் நற்பொருளைத் தெரிவித்த வல்ல
சிவலோக நாதனே யென்றிரு கரத்தை
சிரமேற் குவித்தன்றி ரஞ்சிட சிரத்தை
மேலிட்டு வற்புதத் தோத்திரம் பாடி
மெய்சிலிர்த் தென்புக ணெக்குவிட் டாடி
கண்களில் நீர்பெருகி கர்த்தனைப் பார்த்து
கடவுளே யெனதிரும் பிறவியைத் தீர்த்து
காணரிய நின்னடியில் நாளும் மகிழ்ந்து
கதித்திடச் செய்தெனை யாளுவாய்த் திகழ்ந்து
வாழீச னேயென்று பின்னுந் துதித்து
வணங்கிடக் கண்டீச ரன்பனை மதித்து
மங்காத காட்சியை மாண்பாய்க் கொடுக்க
வாங்கவே நந்தனார்க் கந்நாளிடுக்க
மொழிந்திட வத்திரு சந்நிதியை சுத்தி
ஓயாமல் வலம்வந் தோங்கியே சத்தி
பாகனுத்திரவினாற் திரும்பி தன்னூரை
பற்றிடக் கருதியக் கோயிலின் னாரை
கடந்து பின் வருகின்ற வீதியி லிருந்த
கழறுமோர் பள்ளத்தைக் கண்டலர் பொருந்த
வாவியாய் வெட்டிட மிகவும் நினைந்து
வாழ்சிவ லோகனை மனதிற் புனைந்து
தாயற்ற சேய்தனக் கிணையாய்த் தவித்து
தற்பரா வென்றுகை சிரமேற் குவித்து
வாழ்த்திடக் கண்டா னகமகிழ்ந் தன்பு
மாறாத வருள்தர நந்தனார் பின்பு
அவ்வருளால் திருக் குளந்தனை வெட்டி
ஆவலை தீர்க்கவப் பள்ளத்தைக் கிட்டி
வேலையி லிரங்கிதன் மனம்போ லிடித்து
வெகுசலந் தோன்றவே வாவியை முடித்து
விட்டிது வீசனா லாச்சுதென் றறிந்து

விமலர்க்கு திருப்பணியை மிகவும் புரிந்து
மேவிய வாதனூர் தன்னையவர் நாடி
விரைவாக சேர்ந்தன ரீசனைப்பாடி (ஏலே) (4)

பாட்டினங்கள் சூழ்ந்தலகில்—நாளும்
பரவுஞ்சிவ தலங்க டோறும்
நீட்டிணையே சூழ்ந்தொளிரும்—நீதி
நிமலனுமை வீற்றிருக்கும்
கோட்டங்களை தேடிமுறை—சற்றும்
குறையாமற் றிருப்பணியை
நாட்டிமிகச் செய்தனந்த—னூர்க்கு
ஞானவென் னம்புரஞ்சென்றனனே.

(முடுகு.)

எழுதரிய மாமறைக டேடிடுந் தில்லை
ஏகநாயகனைகண் டிறஞ்சயோ ரெல்லை
இல்லாத பேரின்ப வாரியிற் சேர்ந்து
இருந்திடக் கருதிதன் னுள்ளமுங் கூர்ந்து
திருப்பணிச் செய்திடக் களித்துமே நல்ல.
திறமாக வொளிர்முறை விட்டுபுறஞ் செல்ல
ஒன்றாத நெறிகொண்டு முன்னினு மோங்கி
உளா தில்லை நாதனைக் காணமயல் நீங்கி
இந்நாள் சிதம்பரந் தன்னையே நாடி
இனிதாக சேர்க்கானே துதித்திசை பாடி
அத்திருத் தில்லைக்கு போவதற் கான
அந்தஸ்தி லில்லாத பாவத்திற் கீன
சாதியை நொந்தவு டனன்பெழ நாளை
சாருவோந் தில்லையை வேளை
தள்ளிபின் தத்தளித் தம்பிகைபாக
நற்பரா நந்தனே யென்றுமிக யோக
நற்றவர்கள் சூழ்ந்திலகுஞ் சிற்சபையிலுள்ள
நடராஜ மூர்த்தியை தரிசித்துக் கொள்ள
துணிந்துவச் சேரியி லிருந்திடு மீன
தொழில் செயும் புலையரைக் கண்டுடன் ஞான

வழிகளை யின்னமும் போதிப்போ மென்று
வகையுடன் நந்தனு ரன்னவர்முன் னின்று
சிதம்பரந் தனில்பாம்பு புலிதனக்காக
திருநடன மாடியைத் தொழில்புரிய மேக
தேவனுக் கன்புற்று நீங்களெல் லோரும்
திரளாக வென்றோடு வந்துட னரும்
கன்மத்தைத் தீர்ப்பது நலமென் றெடுத்து
காதலுற நந்தனர் சொல்லத் தடுத்து
முன்னமே சொல்லியுங் கேளாமற் சிரில்
மூடமொழி பேசாமற் போமென்று பாரில்
நில்லாத கோபமுற் றெழுந்துட னந்த
நீசர்கள் யாவரும் வுலகத்தில் வந்த
வகையறியாமலே யன்பரைப் பார்த்து
மதியாம லெதிரிட் டனமொழி சேர்த்து
வைய்தத்தநில்லையிற் சீராக நீடி
வாழ்கின்ற வம்பல வாணரைத் தேடி
சென்று தொழுவிட்பர சாதிக்குநீதி
செறியுமோ செறியாது வாகையாற் சோதி
வளர் பன்னை யாவையு முழுதுபயி ரிட்டு
வகையாக ஜீவித் திருப்பதை விட்டு
சந்ததமு மீசனை மனதினிற்கூட்டி
சதமெனத் தொழுதானை மெய்யென்று காட்டி
திரிவது மில்லாம லெங்களையுங்கெட்ட
செய்கைக்கு ளாக்கிடத் துணிந்தநீ திட்ட
புத்திகளைச் சொல்லியிந்நாள்தனில் வந்து
பொய்யான கடவுளைக் காணவேநொந்து
அழுவதை விட்டுலக வாழ்க்கையிற் கூடி
அதிலுள்ள பலன்களை யசையாமல் நீடி
அனுபவித் தந்தணர்க் கன்பாய் பரிந்து
அவர்களிடும் வேலையை நாளும்புரிந்து
தொழுதிட வன்னவர்கள் கிருபையால் மெத்த
சுகம்பெற லாமென்று விபரீத கத்த
விட்டுவேப் புலையர்கள் சொல்லவே யந்த

யினரை விட்டேகி வெளிவந்து சொந்த
பிசனைத் தொழுதிந்த பாவத்திற்கென்ன
மியற்றுவே னென்றேங்கி நந்தனார் சின்ன
சாதியிற் பிறந்ததோர் தோடத்தை நீக்கி
தண்ணருள் கொடுத்தெனை யாளவே நோக்கி. ஏலே. (5)

நோக்கரிய மாமதியோ—டுலகில்
நுவல்கொன்றை மலர்நதியை
நீக்கரிய நற்சிரத்தில்—நாளும்
நேர்மையுடன் றானணிந்து
யோக்கியமாய்த் தொழுதிறைஞ்சு—மன்ப
ருளமுவக்கத் திருவடியை
ஆக்கினிதஞ் சிற்சபையி—லாடும்
சுந்தரனே வந்தருள்வாய்.

(முடுகு.)

வந்துறும் பிறவியைதீர்ப்பதற் கெண்ணி
மகிழ்ந்திருந்த புலையர்க் குன்புகழை நண்ணி
சாற்றியுங் கேளாம லென்னைமிக வைது
தள்ளினு னாயனே யுமதருளினி லெய்து
அசையாம லற்புதச் சேவடிக் கான்ற
அரும்பணிச் செய்திடச் செய்தொளிர் தோன்ற
சிறப்பருளு மாதியே யென்று தமிழ் சங்கத்
திகழால வாயினிற் றிடமுடன் றுங்கத்
துலங்கவே பொன்னுட டமரரோ டுற்ற
சோதிமா முனிவர் மெய்த் தொண்டரு மற்ற
யாவருங் காணவே யரசுரிமை பூண்டு
அன்பர்கள் கொண்டாட வழகில்மிக நீண்டு
சவுந்தரப் பாண்டிய நாமம் புனைந்து
சகலபுவ னத்தையும் யாள முனைந்து
எழிலரி யாசனத் தமர்ந்துமே வல்ல
ஏகசக் ராதிபதி யாகவே நல்ல
செங்கோலை யோச்சிபின்வழுவாதநீதி
சோறக் தன்னையே செய்திடுஞ் சோதி

வரைராஜ னுக்கினிய மகளாக வந்த
மாதுமை நடாதகை பிராட்டியை சொந்த
மாறுத வன்போடு வந்நாள் மணந்து
அகிலம் படைத்தழித் தசடரை தணந்து
வாழ்கின்ற வம்பல வாணனே நின்பால்
வந்தமர நீயுகந் திந்நாளி லென்பால்
கிருபைவைத் தருளுவா யென்றே துதித்து
கீர்த்தியுட னுதனு ரையரை மதித்து
விரைக்தோடி யன்னவரை கண்டே வணங்கி
வியனுறுந் தில்லையில் யான்சென் றிணங்கி
இருந்திடும் நாதனை வீட்சணங் கண்டு
இறைஞ்சியந் தேவனருள் தன்னையே கொண்டு
இம்மையில் முத்தியை காணுதற் கெண்ணி
இன்போ டேவந்துமை தோத்திரம் பண்ணி
நிற்கின்ற வடியேனை கார்க்கத் துணிந்து
நீடுமுப்புரிநூலை மெய்யி லணிந்து
நித்தியமும் வாழுமுய ரையரே நல்ல
நிலையான வுத்திரவை தாவென்று சொல்ல
கேட்டுடன் அந்தண ரன்பனைப்பார்த்து
கிட்டாத பொருளைநீ மனதினிற் சேர்த்து
சந்ததமு மலைவதை விட்டுலகி லுள்ள
சரியான வுன்குலத் தொழிலைபலர் கொள்ள
செய்ததி னால்வருஞ் செல்வத்தை பெற்று
சிறப்பாக யில்லற வாழ்க்கையி லொற்று
எந்நாளும் வழுவாத பெருமையில் வாழ்ந்து
எழிலுறுஞ் சம்சார சாகரத் தாழ்ந்து
உனக்குரிய வேலையை யினிமேற் புரிந்து
ஒங்கெனப் பூசுரர் வுரைத்தனரறிந்து ஏலே. (6)

அரியயனுந் தேடடவே—அன்று
அனலுருவத் தொருவனையாய்
தெரியபெரும் பூவிலுற்று—நித்யம்
திகழ்கடத் தோடுயர்ந்த

பெரியபான் சிரருளை—புன்னி
பிறங்கு நந்த னூரயனை
பிரியமுடன் கேட்டதுபோல்—நல்ல
பேருனை நல்காத் துயரால்.

(முடுகு.)

துயக்குற்று நந்தனூ ரவ்விடம் விட்டு
துலவில் சென் றந்தணர் பேசிய கட்டு
வார்த்தையின் ஞெருகுதிகளை காதினிற் கேட்டு
வளமுற்ற தேகமும் வேர்த்தாட வீட்டு
கரங்களை சென்னிமிசை தூக்கிக் குவித்து
கண்களில் நீர்வடிய நின்றுத் துவித்து
ஆதியிற் செய்தவினை தீரவே நாளும்
அழகுறுந் திருநாவ லூரினில் நீளும்
அந்தணர் குலந்தனில் வந்தே யுதித்து
அருள்நம்பி யாரூர னென்றே கதித்து
வாழுமித் தரைமீதில் முன்னோர்கள் பண்ய
மாமறைக டன்னோடு வளர்கின்ற திண்ய
அறுபத்து நாலுகலை யாவுந் தெரிந்து
அயராத நற்பருவஞ் சேரப் பரிந்து
தந்தைதாய் முதல் சுற்றந் தாரும் புகழ்ந்து
சரசமுடன் மன்றலை செய்ய மகிழ்ந்து
செய்திடக் கண்டதற் கொப்பி நடந்த
செய்கையை கண்ணுற் றந்நா ளடர்ந்த
கலியாண வாயலிற் காதலுடன் சென்று
கட்டுண்டு பிரபஞ்ச வாழ்க்கையில் நின்று
வாடாத பேறருளை நல்கத் துணிந்து
மன்றலுக் கேற்றபணி யாவு மணிந்து
ஆர்ந்திட்ட சுந்தர மூர்த்தியை தடுத்து
ஆட்கொண் டகலாத காட்சியை கொடுத்து
அன்பாக பாடிடும் பாட்லைக் கேட்டு
அகமகிழ்ந் தன்னவர் குறைகளை வாட்டு
மற்புதச் சோதிசிவ நாதனை நொந்து

அயருமிச் சிறுவனே யன்றுபோல் வந்து
நயவுட னெந்தனைக் கார்த்திட நீதி
தவறிடு மென்றன் கிருந்தாலு மோதி
உள்ளவுனே யாணிவிட் டேகவேறு
உறவில்லை யாதலா லிந்நாளில் வீறு
தந்துநா னெண்ணிய வெண்ணத்தை முடித்
தாரினிற் செய்திடக் கருதியே யந்த
வேதிய ருளத்தில்நீ விரைவாக சென்று
மேவியுன் பாலிலேனே வந்துமே நின்று
நிலையாக தொழும்படிக் காகுமோர் சொல்லை
நீதியுடன் சொற்றிடச் செய்திந்த தொல்லை
வினைகளை மீட்டினி யாளென அதித்து
விரைந்தோர்டி யந்தணர் தாளில் மதித்து
வீழ்ந்திட வலமாக வந்து சேவித்து
வித்தமுள் ளவனேபோ லின்று பாவித்து
வீணுசை யாய்தில்லை வெளியினில் நீடும்
விமலை யிடபாகத் திருந்து நடமாடும்
யீசனைச் காணுதற் கூகவே உங்கள்
யிணைமொழி வேண்டினே னுதலா லெங்கள்
சாதியி லில்லாத முறைமையை நாடி
சரண்புகுந் தன்புகழை நாளுங் கொண்டாடி
புரிந்த பிழை யாவையும் பொறுத்தள முவந்து
போற்றிடு மடிமையை போகவுரை தந்து
காருமென்று ரைத்தவுடன் அந்தணர் நல்ல
கருணையாற் சிதம்பரம் போவென்று சொல்ல ஏலே. (7)

சொல்லியதை கேட்டொளிரும்—திவ்ய
சோதிநந்த னூர்க்கு வந்நாள்
புல்லிய வன்றீதெவையும்—நீக்க
பூரண வுல்லாசத்துடன்
எல்லிலெழுஞ் செங்கதிரை—கண்டு
யெழுந்தலரு மரைமலர் போல்
நல்லிதயங் கூர்ந்திலகும்—தில்லை
நகர்மேவும் நாயகனே.

(முடுகு.)

அகமகிழ்ந் தென்மீது கிருபையை கூர்ந்து
அந்தணர் சிந்தையிற் சென்றுமே சேர்ந்து
அன்னவ ரென்மொழியை கேளாமற் றூற்றி
அனுப்பாத கொள்கையை யட்சணமாற்றி
ஆவலுக் கேற்றமொழி யீந்திடப் பண்ய
அற்புதத்தேவாதி தேவனே புண்ய
குணசில தோன்றலே யென்றுத் துதித்து
கோதற்ற தில்லையை மனதிற் பதித்து
எண்ணிய வெண்ணங்கள் யாவும் பலித்து
யீடேறி னேனென்று மிகவுங் களித்து
வளர்கின்ற செஞ்சோலை வாவிகள் வாழும்
மணிமாட வீதிக ளெங்கிலுஞ் சூழும்
சிங்கார சோற்றறச் சாலைகள் மெத்த
சேர்கல்வி சித்திர மடங்களுஞ்சுத்த
தேவர்கள் வாழ்கின்ற வாலயமுஞ் சோதி
திகழோம மண்டபத் தொகுதியும் நீதி
கன்னலங் கழனிசூழ் வாதனூர் தன்னை
கடுகவிட் டேகிடக் கருதியே பொன்னை
யொன்றசிற் சபையையொண் ணந்தனர் தேடி
போகத் துணிந்துமே தில்லையை நாடி
புறபட்டு வாதனூர் வீதியை கடந்து
பூரண வுல்லாச பொற்பால் நடந்து
போகின்ற மார்க்கத்தி லத்தனைப் பாடி
புகழ்ந்தந்த வீசனு ருதவியை நாடி
ஆதியில் நற்சைவ மதந்தனி லுதித்து
அயராமல் நாலெட் டறங்களை விதித்து
அன்பாக வாழ்ந்துபின் னதைவிட்டு யீன
அமணர்கள் சமயத்தி லமர்ந்ததற் கான
முறைமையை கொண்டாடிக் கொண்டதில் தேர்ந்து
முதிர்ந்து வச் சமணருக் கண்ணலாய் நேர்ந்து
தனக்கு நிகரில்லாம லிருந்ததைக் கண்டு
தானாமல் புறசமய நூற்களைக் கொண்டு

பிதற்றியத் திருநாவுக் கேந்தலை மதித்து
பிரியாமற் றொண்டரொரு நாளுங் கதித்து
வாழவே நற்கருணை யுற்றுவக் காலை
வாங்காமல் வயற்றினிற் கூற்றன சூலை
நோயுறச் செய்தவரை மிகவும் வருத்தி
நோக்கரிய நற்சைவ வாழ்க்கையி லிருத்தி
அன்னவர் சொற்றமிழ்க் கிரங்கிவலி தீர்த்து
ஆட்கொண்ட வய்யனே வென்சொலை யேர்த்து
அவனியில் தேவாதி முனிவர்கள் சூழும்
அற்புதத்தில்லையிற் கோதற வாழும்
சிற்சபை சோதியிற் சேர்த்தெனையாள
சிந்தைகொண் டென்பாலில் வந்திடுங் காள
கண்ட முறுஞ் சிவசோதி கர்த்தனே யென்று
கனதட மார்க்கத்தில் விரைவாக சென்று
காணுவோ மென்கிற காதலா லந்த
கணக்கற்ற வழிகளை கணத்தினில் முந்த
ஓடியே வன்னவயற் சூழ்ந்திலகுந் தில்லை
ஊருக் கிடையாக நின்றுமே வெல்லை
தரிசனங் கண்டுட னுருத யின்பச்
சாகரத் தாழ்ந்தித் தொலையாத துன்பச்
சோகத்தை விட்டவ் வெல்லையிற் றுணிந்து
துரிதமாய் சென்றிட வீசனைப் பணிந்து. ஏலே (8)

பணிகொள்ளும் பொய்கையொடு—நாளும்
பரவுதிருச் சோலைகளும்
அணிகொள்ளும் பண்ணைபல—சூழ்ந்து
ஆயமணி மாடங்களாற்
திணிகொள்ளும் வீதியெங்கும்—காவற்
சேர்தில்லை மாநகர்க்குட்
டுணிகொள்ளும் நந்தனு ருகந்து
துயரறசென் றடைவதற்கே.

(முடுகு.)

அடைக்கல மையனே யென்று அவ்வூரை
அடங்கலுஞ் சூழுமொண் மதிதவி ழாரை

அருகாக பூரித் தன்பாக சென்று
அம்மதில் வாயலிற் கூடியே நின்று
அமருமத் தில்லையின் னற்புதச் சோதி
அணிமாட வீதியில் வாழ்ந்திடும் நீதி
அந்தணர்க ளெந்நாளு மாறாத வேள்வி
அயராமற் செய்திடுஞ் சாலைபல கேள்வி
கற்றிலகு மன்னவர்கள் பிள்ளையினங் கூடி
கருதரிய வேதத் தியானத்தை நீடி
காதலால் செய்கின்ற மடங்களைப் பார்த்து
கற்றவர் திறங்களை சிந்தையிற் சேர்த்து
கல்லாத மாந்தர்க ளஞ்சிப் பயந்து
கலங்குவது போலெண்ணி தில்லையை வியர்து
விம்மித மாகவே தோத்திரம் செய்து
விதியாரு மந்தண வீதியி லெய்து
ஆங்குள்ள பெருமைகள் யாவையுங் கண்டு
ஆறாத வானந்தத் தேனையு முண்டு
அப்புறஞ் சென்றந்த வம்பல வாணன்
அடிதொழு மந்தஸ்த்தி லில்லாத வீணன்
எந்தனைப் போலெந்த வுலகிலும் பார்க்க
இருந்திடா ரென்றுமே யாவரு மேற்க
இப்பிறப் பல்லவோ தில்லையுட் சென்று
யீசனைக் காணாமு ளொட்டுதே யென்று
சொல்லியே அவ்வரன் வாயலை விட்டு
சுகமுற நந்தனா ரோடிவெளிப் பட்டு
தில்லை மதிற்புறத் தருகாகவே சேர்ந்து
தீண்டாத வன்பற சாதியில் நேர்ந்து
வந்திந்த வுலகினில் பிறந்ததை நினைந்து
வாட்டாது வாட்டிடும் வினைகளை புனைந்து
சுமையானா மாகியதை தூக்கித் திரிந்து
தொல்லையா லூர்ந்திடுந் தீனனை யரிந்து
அயராமல் திருக்கடைப் பூரினி லுகந்து
அன்பாக நால்வகை பூக்களை முகந்து
மாறும லர்ச்சித்து வேண்டிட்ட காலை

மார்க்கண்டனுக்காவி முடிவாகும் வேளை
மூளவே அந்தகன் வருவதைக் காட்டி
மூர்ச்சித்த போதவன் பாசத்தை பூட்டி
மலங்கிட வச்சிறு மார்க்கண்டன் றன்னை
மதியாம லிழுத்திடத் தாளாம லென்னை
துதிக்கின்ற பாலனுயிர் கவர்ந்திடக் காலா
துணிந்திங்கு வந்தையே மென்றவனைக் காலா
லுதைத்தந்த பாலனை வாழ்த்திட்ட தேவர்
ஓடிவந் தெனையாள வினியென்ன தாவா
என்றரனே யென்றவ் வெல்லையை முற்றும்
இணையிலாப் பேரன்பு கொண்டுடன் சுற்றும்
இயல்புற்று வாகந்த பாடலை நல்ல
இசையுறப் பாடிக்கூத் தாடியே வல்ல
நீதியா லல்லுபகல் நீங்காத பத்தி
நிற்கவே வோயாமல் வலமாக சுத்தி
எண்ணரிய நடராஜ மூர்த்தியை கண்டு
ஏகாந்த மாகவே யிணங்கியருட் கொண்டு
இனிவாழ்வ தரிதென யேங்கித் தவித்து
எண்ணிமிக நாள்வலம் வந்துகை குவித்து
அம்பல வாணரே யுன்னைவிட வேறு
ஆதார மில்லையென் றறைந்துமே யீறு
இல்லாத மண்பீதி லன்பருஞ் சாய்ந்து
இளகியே நித்திரை செய்தன ராய்ந்து (ஏலே) (9)

ஆய்ந்திலகுந் தேவர்முதல்—மற்ற
அன்பர்களுக் காகவருள்
தோய்ந்திலகு மூர்த்திநட—ராசன்
தூயமன மாகியன்பு
வாய்ந்திலகும் நந்தனார்க்கு—பக்கான்
வாஞ்சையுடன் கனவிலுற்று
ஏய்ந்திலகும் தீதெவையுந்—தீர்க்க
எண்ணியுன் னைப்புரிந்தே.

(முடுகு.)

புரிந்தொளிர் சிற்சபை தன்னிலே பாம்பு
புலிதனக் காடியே வன்னவரை யோம்பு
மற்புதச் சங்கரன் வன்பனைப் பார்த்து
அன்பரோ நம்பொருட் டாகவே யோர்ந்து
அம்பலந் தன்னைவிட்டு வந்தன மிங்கு
ஆதலாற் சென்றுநீ அயராமற் கொங்கு
குழெனது சந்நிதி முன்பாக வந்து
சோரும்பிப் பிறவியை நீக்குதற் குகந்து
தீயிற் குளித்தெழுந் தின்னலைத் தீர்த்து
தில்லைவா ழந்தணர்க ளம்மோடு பூத்து
தரிசிக்க வாவென்று சாற்றியே மெத்த
சரசமா யவ்விடம் விட்டேகி சுத்த
மெய்யெங்கும் நற்திரு வெண்ணீறை பூசி
வேதங்கள் யாவையு முறைமையாய் பேசி
இம்மியும் வழுவாமல் நேர்ந்துமோ ரெல்லை
இல்லாத யாகத்தை செய்திடுந் தில்லை
வேதியர்கள் சொற்பனத் தூற்றுமே யாதி
விரைவாக நந்தனூர் பெருமையை யோதி
தெரிவிக்க வன்னவர் முகங்களை நோக்கி
தீராத காதல்கொண் டென்புகழை யாக்கி
தொழுகின்ற வன்பர்கா ளுங்களைப் போன்ற
தொழும்பரிப் பதியெல்லை மதில்புறத் தான்ற
பீதியா லிங்குவர மாட்டாமல் சேரா
பிரியாமற் சந்ததமும் வல்மாக வூரா
சுற்றியே நிற்குரா ராங்கவரைத் தேடி
சுகமாக வீங்கவரை கொடுவந்து நீடி
செறிகின்ற வக்கினியை மூட்டியே யந்த
தீயினில் மூழ்கவே செய்துலகின் பந்த
மாசான பிறவியை தீர்த்திட நீங்கள்
மகிழ்ந்துமே யாவரும் விரைவாக போங்கள்
என்று கட்டளையிட்டு நடராச மூர்த்தி
எழுந்தந்த புறத்தைவிட் டெண்ணிலா நேர்த்தி

துணிந்துமே மாறாத நீதியால் நல்ல
கருத்துறுஞ் சிந்தைவலி வாலே நடந்து
கடுகவவ் விடத்தைவிட் டந்நாள் கடந்து (ஏலே) (10)

கடக்கரிய வல்வினையால்—வந்த
கருவலையை நீக்குதற்கு
அடக்கரிய புலனடக்கி—ஞான
வாயுதத்தை கொண்டுசென்மத்
தொடக்கறிய நேர்ந்தவன்ப-ரிந்த
தொல்லுலகிற் சந்ததமும்
நடக்கரிய கிர்த்தியங்களை—செய்யும்
நாதன்சபை பக்கமுற்றே.

(முடுகு.)

உற்ற துணையாய்சென் றன்பனைப்பார்த்து
ஊக்கமோ டுஞ்சாமத் தங்கன்பாற் சேர்த்து
கொடுவந்து சபைக்கிடையில் விட்டுபின் வெய்ய
கூற்றுதைத் தோனிட்ட கட்டளையை செய்ய
கூடி மூவாயிரம் பேர்களுந் தேர்ந்து
குளிர்மதி பூரணச் சித்ரங்கள் தீர்ந்து
திகழ் தில்லை தென்புறத் தசனொடு ஓங்கி
செறிகின்ற கோபுர வாயல்முன் நீங்கி
மறையாத வக்கினியை மூட்டத் துணிந்து
மாநட மூர்த்தியை மனதினி லணிந்து
அய்யனே வென்றவ் விடத்தினி லான்ற
அணியோடு யாவர்க்கு மாழமாய்த் தோன்ற
குழியாக்கி வேண்டிய பொருளெலாங் கூட்டி
குறைவற யாகத்தை செய்யநிலை நாட்டி
செய்தனர்க ளத்தில்லை வேதியர்களாய்ந்து
தேர்ந்தமா முறைமையை கொண்டாடி வாய்ந்து
வளர்மந்த்ர தொகுதியை வாயார ஓதி
வழுவாம லெவரையு மாண்டருளு மாதி
தேவனருளால் யாக சடங்கினை முடித்து
தீராத சென்மத் தொடக்கைப் பொடித்து

ஆநந்த வாரிதியி லாழ்ந்திங் கதிக்க
அன்பர்முதல் யாவருங் கண்டே மதிக்க
ஆளாக வந்தவரை யார்தங்கும் க்ஷேம
அய்யனே யுமக்காக சந்நிதியின் யாம
ஊரண்புறந் தன்னிலே யன்றரன் சொற்ற
அறைப்படிக் கோர்குழியில் மாறாமற் பற்ற
உறுதியா யக்கினியை வளர்த்திடு மென்று
உயர்வாக சொல்லிமெய் யன்பரோ யின்று
அக்குழிக் கருகாக சென்று நீரிந்த
ஆக்கையை போக்கிட மெத்தவுஞ் சொந்த
சிற்சபை நாதனை சிந்தையில் நினைந்து
திக்குழியை சுற்றியொண் டோத்திரம் வனைந்து
சேவிக்க வாருமென் றந்தணர்கள் கூவி
தெரிவித்த பின்னந்த னூர்மிகத் தாவி
சென்றவர்க ளுரைத்தமொழி தப்பாமற் செய்ய
சேர்ந்துவப் பள்ளத்தை சுற்றவே துய்ய
நெறியினுல் கனகசபை மூர்த்தியை பணிந்து
நிற்காமற் சுற்றிவலம் வந்துபின் றணிந்து
அக்கினி பள்ளத்தில் மூழ்குதற் காக
அகமகிழ்ந் தோங்கவே நற்சிந்தையாக
நற்றிரு வாரூரி லுத்தமனொண் பரவை
நாச்சிதன் வீட்டில்வன் றொண்டரின் வரவை
கண்டவுட னவளைய போக்குவே னென்று
கழறியே கோபித் திருந்ததை யன்று
பலரால் தெரிந்ததை கேட்டுடன் மிக்க
பதைத்துச் சுந்தரமூர்த்தியுந் தாக்க
கடலாழ்ந்த யோதிரவில் தூதாக ஓடி
களிப்புட னப்பரவை வீட்டினிற் கூடி
நாயனு ரெண்ணத்தை நவின்றவள் சினத்தை
நசித்தவ் விருவரு மொருங்கிடுங் கனத்தை
செய்தவரை வாழ்வித்த சின்மய நாதா
தேவர்முதல் யாவர்க்கு மாடிடும் பாதா
அவ்வண்ண மிவ்வேளை துணையாக நின்று

ஆளொன்று கும்பிட்டு மூழ்கினார் தொன்று
தொட்டுவருஞ் செங்கிருமி சேர்மலக்கேணி
துன்னியுறும் பாழான தேகத்தை வேணி
பொங்கரன் சேவடித் துணையா லழிந்து
பேரம்படி செய்தொண் மறைகளை மொழிந்து
வளர்கின்ற வந்தண யோகியைப் போன்ற
வண்ணமா யுருத்ராட்ச மாலையுந் தோன்ற
மெய்யெங்கும் வெண்ணீற்றின் சோதினால் துன்ன
விரிகாதிற் குண்டலச் சடைமுடியு மின்ன
மிககாவி யோடன்பர் செம்மைக் கொழுந்து
விரிந்தெரியுந் திலைவிட் டன்பா லெழுந்து
தொண்டருக் கன்னையாய் தொல்லுலகில் நின்று
சூழ்வினையை நீக்கிய வத்தனே யென்று
விளங்கினா ரப்போது விண்ணுலகில் நீண்டு
விளம்பரிய மெய்ஞ்ஞான நீதியைப் பூண்டு
உகந்துவா ழமரர்கள் யாவரு மாவ
லுற்றிடத் தோற்கருவி முதலான தேவ
துந்துமி யைக்தையுக் திரளாக சேர்த்து
சோராமற் கடலொலி போலவே யார்த்து
கேட்டபொரு ளனைத்தையுங் கீர்த்தியுட னிய
கிளைத்தலர்ந் தெந்நாளு மங்கிலகுந் தூய
கற்பகப் பூமாரி தன்னைப் புகழ்ந்து
கனைக்கறப் பெய்தன ருள்ளம் மகிழ்ந்து
வேதாக மங்களை விதியா லரிந்து
வித்தகக் கடலாடி வேள்வியை புரிந்து
விம்மித மாகவே நிருத்தனைக் கண்டு
விலகாமல் வாக்காதி முதலான தொண்டு
இயற்றிடுந் தில்லைவா ழந்தணர்கள் மூவா
யிரவரும் புளகமுற் றுள்ளத்தி லோவா
பத்தியில் வாசமுட னஞ்சலியை செய்ய
பரிந்துடே யஞ்சாமற் பாங்குடன் றுய்ய
முடிமீது கரங்களை கூப்பியே வேண
முறைப்படி தோத்திரம் பண்ணினார் காண

அங்குள்ள சிவத்தொண்டர் யாவருங்கூடி
ஆனந்த பாடல்களை யன்பாக பாடி
அஞ்சலித் தகங்களி கொண்டார்கள் மற்ற
அருந்தவத் திருடிக ளெஞ்சாமற் கற்ற
நீதியால் வந்தித்து யிருதயங் கூர்ந்து
நீடும்ப ராளவர்க ளங்கனம் நேர்ந்து
வாழ்த்தினார் கனைத்தவர் மிகவுமதித்து
மகிழ்ந்தார வாரமுட னேங்கத் துதித்து
தென்சிகர வாயலை விட்டோடி வாழும்
திவ்யமா மறைகணிதம் நீங்காமற் சூழும்
கனகசபை தன்னிலே கீர்த்தனமாடி
காணரிய காட்சியை யாவர்க்குந்தேடி
ஈய்ந்தருளுஞ் சிற்பர னாதனிரு சீத
இணையடித் தாமரையை போற்றிமெய்ப் போத
வீடடைய நந்த முனிவருந் தில்லை
வேதியர்க டம்மோடு பொற்சபையினெல்லை
புட்செலல வான்மாக்கள் பீதினிலுள்ள
பூர்ச்சிதக் கருணையா லைந்தொழிலைக் கொள்ள
நடத்திடுங் கர்த்தன்மா கிருபையைக் கண்டு
நற்சிந்தை யாகவே யென்றுதியைக் கொண்டு
எண்ணத்தை முற்றிலும் நிறைவேறச் செய்து
ஏதமுறுஞ் சென்மத்தொ டக்கினைக் கொய்து
என்பாலி லாறுத ஆவலுமுதித்து
ஏகாந்த வீட்டினி லிருந்திட விதித்து
ஆட்கொண்ட தேவாதி தேவனே யென்று
அம்பலத் தரனருகிற் சென்றுட னன்று
அருட்பெருஞ் சோதியிற் சேர்ந்தனர் முன்பு
அங்குற்ற யாவரு மன்பரைப் பின்பு
காணாமல் மெத்தவும் நெஞ்சங் குழைந்து
கருதரிய காட்சியை கண்டோம் விழைந்து
என்றுமே முனிவர்க ளதிசயப்பட்டு
எழிலாக பாவினார் தில்லையை விட்டு
பிரியாத வந்தணர்கள் கண்டதை வியந்து

பேசியே வணங்கினர் மற்றவர் வியந்து
போற்றின ரம்பல வாணனு மகிழ்ந்து
பொற்புற வழைத்துடன் மிகவும் புகழ்ந்து
தன்னடியில் வைத்திடக் கோபுரவாயில்
தன்னிடை வளர்த்திய மாயாகதீயில்
இரங்கிடச் செய்திலகு மாசான பந்த
ஈனமாந் தேகத்தை போக்கியே நந்த
முனிவர்க் கேகாந்த சேர்வையைக் காட்டி
முளரியந் திருவடி நீழலிற் கூட்டி
கொண்டபின் மாறாத பூசனையை நல்ல
கொள்கையுட னகங்களி கூர்ந்துமே வல்ல
சரசமுடன் சதுவிதப் பூக்களைப் பெய்து
தற்பரனை யர்ச்சிக்கு நிலமையி லெய்து
அகிலத்தில் யாவரு மன்பாய் துதிக்க
ஆனந்த வாரியில் நீடினர் மதிக்க (ஏலே) .(11)

வாழ்த்து.

கட்டளைக்கலித்துறை.

மன்னிய வேதசி வாகம நீதி மலிந்தருளிற்
றுன்னிய வன்ப ரிமையவ ரந்தணர் சூழிசையாற்
பன்னிய விந்நூற் படிப்பவர் கேட்பவர் பார்வெளியில்
:மின்னிய நந்தனு சொன்னெறி வாழ்க மிகவுநன்றே.

யாவுந்திருவருட்செயலென்று
மெய்யடியார் திருவடிகளே சரணம்.

முற்றிற்று.

உ

சிவமயம்.

# பிழைதிருத்தம்

| பக்கம். | வரி | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 8 | 24 | வார்த்தை | வாரத்தை |
| ,, | 32 | நாடி | தேடி |
| 9 | 9 | சோல்லரிய | சொல் லரிய |
| 15 | 17 | நாளிடுக்க | நாளிவிடுக்க |
| 17 | 16 | வைய்தந்த | வைதந்த |
| 18 | 14 | வ்ந்தருள் | வந்தருள் |
| ,, | 24 | பொன்றைட | பொன்றைட் |

உ

வேலுமயிலுந்துணை.

# விளம்பரம்.

இதனால் சகல கனவான்களுக்குந் தெரிவிப்பது யாதெனில், அறுபத்துமூன்று நாயன்மார்களிலொருவராகிய திருநாளைப்போவார் நாயனாரென்னும் நந்தனார் திவ்ய சரித்திரத்தை யாவருமெளிதி லுணரும்பொருட்டிங்ஙாட் சில நண்பர்கள்வேண்ட அதுபோல் முயன்று ஆண்டவன் திருவருட்செயலால் அச்சரித மனைத்தையும் ஏலச்செய்யுளாக்கி உயர்ந்த காகிதத்தில் அச்சிட்டிருக்கிறபடியால் அரன்பால் அன்புள்ள ஆன்றோர்களனைவரும் இந்நூலை பெற்று உளம் களிப்பீர்களென்று மிகவும் கேட்டுக்கொள்ளுகின்றனன்.

இதன் விலை அணா 0-1-0. தபால்சார்ஜ் 0-0-6. வேண்டியவர்கள் தபால் லேபில்களனுப்பியேனும் பெற்றுக்கொள்ளலாம்.

இப்படிக்கு.

ஓ. சி. வேதாசலமுதலியார்.

6-ம் நம்பர் வீடு.

சந்திரபானுவீதி

கோமளீஸ்வரன்பேட்டை

சென்னை.

சுவடிகள் பாதுகாப்பு மய்யம் அரியநூல்
தமிழ்த் தாய் 67 - வெளியீடு

ஓ.சி. சோணாசல முதலியாரவர்கள் இயற்றிய

திருநாளைப்போவாரென்னும்

# நந்தனாரேலப் பாட்டு



Pub No : 838
ISBN : 978-93-85165-49-8
நந்தனாரேலப் பாட்டு
30.00